... நூலகம்
மாநகர ... ம்
யாழ்ப்பாணம்

முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 88 பிரசோற்பத்தி மாசி 11 ( 23 02 1992 ) ஞாயிறு

## தேர்தல் ஆணையாளருக்கு ஜே. வி. பி. விண்ணப்பம்

ஜே. வி. பி இயக்கத்தினர் மீண்டும் அரசியலில் ஈடுபட விரும்புவதாக தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பித்துள்ளனர் என லக்திவ பத்திரிகை தெரிவித்துள்ளது. தம்மை ஒரு அரசியல் கட்சியாக்க வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுள்ளனர். அரசு சரியான முறையில் ஜே. வி. பியை தடை செய்ய வில்லை எனவும் மேலும் அதனால் அவர்கள் அரசியலில் ஈடுபட விரும்புவதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

# இந்தியாவிலுள்ள அகதிகள் நாடு திரும்ப மறுக்கிறார்கள்

## அகதிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லை

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் பலர் இலங்கையில் தமக்குப் போதிய பாதுகாப்பு இல்லை எனக் கூறி நாடு திரும்புவதற்கு விரும்புகிறார்கள் இல்லை எனச் சிங்கள பி. பி. ஸி. தெரிவித்தது.

இலங்கை அரசு பாதுகாப்பு வழங்கப்படும் என முன்னர் உறுதியளித்தது ஆனால் தற்போது வடக்கு, கிழக்கில் நடைபெறும் சம்பவங்களினால் தமக்குப் பாதுகாப்பு இல்லையென இந்த அகதிகள் அச்சம் தெரிவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலைக்கு வந்த இவர்களுக்கு 2000 ரூபா உதவிப் பணமாக வழங்கப்படும் என முன்னர் இலங்கை அரசு அறிவித்தது.

ஆனால் திருகோணமலை திரும்பியவர்களுக்கு 250 ரூபா வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது

தமிழ் நாட்டில் உள்ள 2லட்சத்து 30 ஆயிரம் தமிழ் அகதிகளில் முதலில் 10 ஆயிரம் பேர் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்தனர்.

ஆனால் தற்போது மூவாயிரத்துக்கும் குறைவான அகதிகளே நாடு திரும்ப விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நியூசிலாந்து அணி வெற்றி

உலகக் கோப்பைக்கான சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் பந்தயத்தின் முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 39 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணியைத் தோற்கடித்தது.

நேற்று ஒக்கிலாந்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 60 பந்து

...04 ஆம் பக்கம் பார்க்க

## மணலாறு அறிமுக விழா

மணலாறு நூல் அறிமுக விழா யாழ் இந்துக் கல்லூரியில் இன்று பிற்பகல் 4மணிக்கு நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் கலாநிதி சிற்றம்பலம், கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மலையகத்தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது

கடந்த சில தினங்களுக்கு முன்பு கொழும்பு மாநகரில் பொலிஸார் தேடுதல் நடத்திக் கைது செய்த தமிழ் இளைஞர்களில் மலையகப் பகுதியைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்.

வழமையான பொலிஸ் நடவடிக்கையின் போது வடக்கு கிழக்கு இளைஞர்களே அதிகம் கைது செய்யப்பட்டுவந்தனர்.

பதுளைப்பகுதியில் புலிகள் ஊடுருவியிருப்பதாக அரசு தெரிவித்துவரும் தகவலையடுத்து இவ்வாறு கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மூதூரில் படையினர் சுட்டதில் 5 தமிழர் பலி; இருவர் காயம்

திருகோணமலைமாவட்டத்தில் மூதூரில் இறால்குழி என்ற இடத்தில் கடந்த 14 ஆம் திகதி படையினர் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தினால் ஐந்து தமிழர் கொல்லப்பட்டனர்.

நல்லையா இன்பராஜா, செல்லையா பாக்கியராஜா. லோகேஸ்வரன், க. ராஜன், த. சத்தியராஜா ஆகியோரே இவ்வாறு கொல்லப்பட்டவர்களாவர்.

வேலுப்பிள்ளை மோகன், தம்பிராஜா மோகன் ஆகிய இருவரும் துப்பாக்கிச்சூட்டுக் காயமடைந்தனர்.

## போதிய மாணவர் இன்றி பயிற்சி நெறி நிறுத்தம்

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் 1992 ஆம் கல்வியாண்டிற்கென தெரிவு செய்யப்பட்ட பயிற்சி நெறிகளில் ஒன்றான தொழிற்கல்வியான தேசிய தராதரப் பத்திரம் (மாலை) பயிற்சி நெறி போதிய மாணவர்கள் இல்லாததால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சி நெறியைக் கற்க வங்கியில் பணம் செலுத்திய மாணவர்கள் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் தமது பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. 15

## இராமேஸ்வரத்திலிருந்து 511 அகதிகள் வருகை

இலங்கைத் தமிழ் அகதிகள் 511 பேர் நேற்று எம். டி. இராமானுஜம் கப்பலில் இராமேஸ்வரத்திலிருந்து மன்னாருக்கு புறப்பட்டனர்.

இராமேஸ்வரத்திலிருந்து அகதிகள் வருவது இதுவே முதற்தடவையாகும்

ஏற்கனவே ஐந்து தடவைகள் சென்னையிலிருந்து திருகோணமலைக்கு அகதிகள வந்தனர் என்பது தெரிந்ததே

தலைமன்னார் வரும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவில் தங்கிய அகதிகள் உடைமைகள் புளொட், ரெலோ உறுப்பினர் அபகரித்தனராம்

வடக்கு கிழக்கில் இருந்து இந்தியாவுக்கு தமிழர்கள் அகதிகளாகச் சென்றதையடுத்து இவர்களின் உடைமைகளை ரெலோ, புளொட் இயக்கத்தினர் அபகரித்ததாக சிங்கள பி. பி. ஸி நேற்றிரவு தெரிவித்தது.

## ஜனாதிபதி மாணவர்கள் கொழும்பில் சந்திப்பு

கடந்த கல்விப் பொதுத்த ராதரபத்திர உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற 106 தமிழ் சிங்கள மாணவர்கள் நேற்று ஜனாதிபதி பிரேமதாஸவைச் சந்தித்தனர்

இவர்களுக்கு ரொக்கப் பரிசுகளும், வேறு பரிசுகளும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

## இரு இந்திய ஹெலிக்கப்டர்கள் தலைமன்னார் வருகின்றன

இந்தியாவிலிருந்து தலைமன்னாருக்கு தமிழ் அகதிகளுடன் வரும் இராமனுஜம் கப்பலுக்கு பாதுகாப்பாக இரு இந்திய ஹெலிக்கப்டர்களும் வருகின்றன.

இந்த ஹெலிகொப்டரில் இந்தியப்படையினர் இருப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சாவகச்சேரியில் கலை நிகழ்ச்சி

இன்று இரவு 7 30 மணிக்கு தென்மராட்சிப் பிரிவு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் யாழ் மாவட்டத்தினர் நடாத்தும் கலை நிகழ்ச்சிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி திறந்த வெளியரங்கில், விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சிப் பிரி

—04 ஆம் பக்கம் பார்க்க

## வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வர்?

இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பனவற்றை அரசு தனியார் மயப்படுத்தினால் வங்கி ஊழியர்கள் 22 ஆயிரம் பேர் வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வார்கள் என சிங்கள பி. பி. ஸி தெரிவித்தது.

இதனால் இவ் வங்கிகளின் வேலைகள் பாதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்துடன் தமிழ் குழு சேர்ந்து புரியும் கொடூரம்

1990 யூன் மாதம் தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3500 தமிழர்கள் காணாமற் போயுள்ளனர். அரசாங்கப்படையினரே இதற்குக் காரணமாவர். அரசாங்கம் மனித உரிமைகள் மீது அக்கறை இருப்பதாகத் தெரிவித்த போதிலும் உண்மையில் அதுவே மனித உரிமைகளை மீறும் அராஜகச் செயல்களில் ஈடுபடுகிறது.

இவ்வாறு கடந்த வாரம் வெளிவந்த மனித உரிமைகள் பற்றிய அறிக்கையில் தெரிவித்திருப்பதாக பி பி ஸி அறிவித்தது.

மனிதஉரிமைகள் பற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் குழு என்ற தரப்பினரால் மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

தற்போது மட்டக்களப்பில் காணாமற்போவதற்கு இளைஞர்களே இல்லை ஏனெனில் அவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டும் காணாமற்போயும் உள்ளனர் எனத் தெரிவித்த அந்த அறிக்கை இராணுவ முகாம்களில் இளைஞர் சித்திரவதை செய்யப்படுவதையும் சுட்டிக் காட்டியிருக்கிறது.

மன்ன... ...ள்ளாடி இரா

—... பக்கம் பார்க்க

## அகதிகளை ஏற்பதில் இலங்கை பின்னிற்கிறது

இலங்கைத் தமிழ் அகதிகள் நாடு திரும்புவதை பிரான்ஸில் நடைபெற்ற உதவி வழங்கும் மாநாட்டிற்கு முன்னர் இலங்கை விரும்பியிருந்தது.

ஆனால் தற்போது இம் மாநாடு முடிவடைந்த பின்னர் அகதிகளை ஏற்பதில் இலங்கை அரசு பின்னிற்பதாக சிங்கள பி. பி. ஸி தெரிவித்தது

இதனாலேயே தலைமன்னாருக்கு அகதிகள் வருவது இம் மாதம் 16 ஆம் திகதியிலிருந்து தாமதப்பட்டு நேற்று முடிவு எடுக்கப்பட்டதாகவும் பி. பி ஸி. மேலும் தெரிவித்தது.

அண்மையில் நல்லை ஆதீன கலா மண்டபத்தில் நடைபெற்ற கம்பன் விழாவில் இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகத் தலைவர் புதுவை இரத்தின துரை அவர்கள் தமது தலைமையுரையைக் கவிதையி லேயே ஆற்றினார். அவர் படித்த கவிதையை இங்கு தருகிறோம்.

## நாங்கள் எழுவோம் நாடொன்று நாம் சமைப்போம்

குண்டுபட்டுப் போனவர் எத்தனை?
குடல் சரிந்து போனவர் எத்தனை?
வண்டியில வரும் போதிலே கடலிலே
வாழ்விழந்து போனவர் எத்தனை?
கொண்ட லட்சியம் குன்றிடாதெங்களின்
கொள்கை வீரரின் காலடி மண்ணிலே
நின்று கொண்டொரு போர்க்கொடி தூக்குவோம்
நிச்சயம் ஒரு தாயகம் காணுவோம்;

★

தப்பிவந்த தங்கமெனச் சொல்லிச்சொல்லி
தாலாட்டுப் பாடியதும் தூக்கிக் கன்னம்
உப்பிவிட முத்தமழை பொழிந்து எந்தன்
ஊத்தையுடல் நக்கியதும் மகனே ராசா
எப்பவடா நீ வளர்ந்து வருவாயென்று
ஏணையிலே கேட்டதுவும் நினைவிலுண்டு
அப்படியாய் வளர்த்த மகன் அரங்கில் வந்தால்
அம்மாவின் மலரடியே முதலிற்தோன்றும்.

★

தமிழோடு எந்தன் தலைவாசல் நின்று
கம்பாடு என்ற பெருமான்
துணலாக எந்தன் கவிமுழ அன்று
குருவாக நின்ற முருகோன்
அமிழ்தோடு ஊறி அழகாக ஓடி
ஆறாகப் பாயும் கவிதை
அரசேஉன் நிழலில் அடியேனும் வாழ்ந்த
அக்காலம் என்றும் மறவேன்
புகழ்தேடியுண்டு புரையேறிப் போகும்
புலவோர்கள் வாழும் ஊரில்
புதிராக வாழும் முருகையன் ஐயன்
புகழ்பாடப் புதுவைக் கவிஞன்
வளமேதும் ஆற்ற சிறுபாலன், பாடும்
வகையேதும் அறியா மூடன்
வழியற்று நாலு வரிகீறி வந்து
வைததேனே ஏற்று அருள்க.

★

மங்கலங்கள் மட்டுமே உள்ளதோர்
மனமிருப்பதால் உடல் பெருத்தவா
கம்பனென்றதோர் மானுடன் பாடிய
காவியக் கடல் மூழ்கி மூழ்கி நற்
சங்கெடுத்தெமை ஊதி எழுப்பிடும்
சாந்தனே! ஜெயராசன் எனப் பெயர்
இங்கு கொண்டுவந் தெம்மை மயக்கிடும்
இனிய வார்த்தைகள் எங்கு கற்றனை.

★

கம்பனின் தமிழ் காதில் இனித்திடும்
கரும்பு வாயினில் மட்டும் இனித்திடும்
பொங்குகின்றவுன் பேச்சும் பகிடியும்
பொழுதுபட்டு விடிந்தும் இனித்திடும்
சங்கையான எச்சபையும் உந்தனின்
தமிழில் மெல்ல மெல்ல உருகிடும்
அம்மைபோலவும் தோன்றுவாய்; எங்களின்
ஐயன் போலவும் பேசுவாய் வாழி நீ

★

வீட்டுக்கே விடுதலை வேண்டும் யுகத்தினிலே
நாட்டுக்கு விடுதலை நாடிக் களத்தினிலே......
சாவோடு விளையாடிச் சந்ததியே தியாகி
பூவோடு. பிஞ்சும் புலியாகும் காலத்தில்
கூட்டத்தில் சும்மா கூடிப் பிதற்றாமல்
பாட்டாலே...... ஈழத்தைப் பாலிக்கும் பாவலர்காள்
ஒன்றாகி நாங்கள் ஒருகாலம் பாவரங்கில்
நின்றோம். பாவாலே ... நீள்விசும்பைத் தொட்டுவிட்டு
வென்றோம்; அது எமக்கு வேனில்; மீண்டுமெமைக்
கூட்டி ஒரு அரங்கில் குவித்த தமிழ்க் குண்டன்
ஆட்டி எமை அன்பால் அரவணைக்கும் தமிழ்த்தொண்டன்
கூப்பிட்டான் வந்து ......குவிந்துள்ளோம்; இதற்குள்ளே
ஆப்பிட்டுக் கொண்டு அசைய வழிதெரியாது
பூத்த கவிச் சோலைப் புரத்துள்ளே. புல்லாகப்......
பாக்கொண்டு வந்த பாவி நான். உங்களைப்போல
செய்யும் திறனோ... செய்தவற்றை மழை போலப்
பெய்யும் திறனோ ... புதுவைக்குக் கிடையாது
எதுகை இது மோனை இப்படித்தான் யாப்பென்று
புதுவைக்கு ஏதும் புரியாது ...... பாவலர்காள்
நாளையொரு வாழ்வு நமக்காக மலருமென
வேளையெதிர் பார்த்து வேதனையைச் சகித்திருக்கும்
உங்களுக்கும் நீங்கள் உரைக்கின்ற கவிகேட்க
வந்திருக்கும் சபையினருக்கும் வணக்கம் வாழ்த்துக்கள்.

(தொடரும்)

# 'தடா' தடைச்சட்டத்தின் கீழ்
# தமிழகத்தில் 948 பேர் காவலில்!

ராஜீவ்காந்தி கொலையை வரை சுமார் 948 தமிழர்கள் அடுத்து தமிழ் நாட்டில் இது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் கணிசமானோர் இலங்கைத் தமிழர்களெனவும் சொல்லப்படுகின்றது.

கைது செய்யப்பட்டோர் இந்திய அரசின் 'தடா'ச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

## திருமலையில் மகன் அரந்தலாவையில் தந்தை

திருமலை-சீனன்குடா விமானப்படைத் தளத்தில் ஏற்பட்ட பாரிய குண்டுவெடிப்பில் படுகாயமுற்ற சிப்பாய் ஒருவரின் தந்தையான படைவீரர் ஒருவர் மற்றொரு குண்டுவெடிப்பில் படுகாயமுற்றுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

திருமலை குண்டு வெடிப்பில் படுகாயமுற்று கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் விலியம் பெர்னாண்டோ என்ற விமானப்படை சிப்பாயின் தகப்பன், அவரை வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டு விட்டு திரும்பிக் கொண்டிருக்கையில் கிழக்கில் அரந்தலாவையில் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் சிக்கி படுகாயமுற்றாராம். படுகாயமுற்ற மகனும், தந்தையுமான இந்த இரு சிங்களப் படையினரும் தற்பொழுது கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் சொல்லப்படுகிறது. (13)

## இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் கொழும்பில்!

இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் ஆர். அபேயங்கார் தற்பொழுது கொழும்பு வந்துள்ளார்.

இவர் கொழும்பில் இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுநடாத்திவருகிறார்.

நாடு திரும்பும் தமிழ் அகதிகளின் பராமரிப்பு, கொடுப்பனவு சம்பந்தமான விடயங்களை மேற்பார்வை செய்யவே அபேயங்கார் இலங்கை வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## நவநீதகிருஷ்ணன் தம்பதியர் கொழும்பு வருகின்றனர்

நாட்டார் இலக்கியத்தில் ஈடுபாடுடைய தமிழகம் நவநீதகிருஷ்ணன் தம்பதியினர் தமது குழுவினருடன் அடுத்த மாத முற்பகுதியில் கொழும்பு வரவுள்ளனர்.

பேராசிரியர் நவநீதகிருஷ்ணன் அவரது மனைவியான டாக்டர் விஜயலக்சுமி நவநீதகிருஷ்ணன் ஆகியோர் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் தற்பொழுது பணிபுரிந்து வருகின்றனர்.

## 125 மைல் வேகத்தில் செல்லும் அதி நவீன கப்பல் வெள்ளோட்டம்

150 வருடகால உந்து தள்ளி முறையிலான கப்பலை ஓட்டும் முறையை விட்டு அதி நவீன முறையில் ஓடக்கூடிய கப்பல் ஒன்றை ஜப்பான் வெள்ளோட்டம் விட்டுள்ளது.

பார்வைக்கு தோற்றத்தில் ஒரு திமிங்கலத்தில் விண்வெளி ராக்கெட்டுகள் பொருத்தப்பட்டிருப்பது போல சிலுவை வடிவத்தில் அமைந்துள்ள இக் கப்பலுக்கு யாமாற்றோ I என்று பெயர் சூட்டப்பட்டது.

அதி நவீன கருவிகள் பூட்டப்பட்ட இக் கப்பல் மணிக்கு 125 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடியது. 30 மீற்றர் நீளமும் 280 தொன் நிறையுள்ளதுமான இதில் 10 பேர் செல்லக்கூடிய வசதியும் இருக்கின்றது.

இக் கப்பலை நிர்மாணிப்பதற்கு 40.1 மில்லியன்டொலர்களை 'தசிப் அன்ட் ஓஷன் பவுண்டேசன் என்ற ஸ்தாபனம் செலவிட்டுள்ளது.

'யாமாற்றோ' என்ற இக் கப்பலின் பெயர் இரண்டாவது உலக யுத்தத்தில் அமெரிக்கர்களினால் நாசமாக்கப்பட்ட கப்பலின் பெயரை ஞாபகப்படுத்துவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இவர்களுக்கு கிடைத்தது

உள்ளூராட்சி சேவைத் திணைக்கள ஓய்வூதியம் பெறுவோர்க்கு பெப்ரவரி மாதவவுச்சரில் வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 100 ரூபா அதிகரிப்பு தை மாத நிலுவையுடன் வழங்கப்பட்டுள்ளது. (16)

## நோயாளர் நலன்புரி சங்கக் கூட்டம்

தென்மராட்சி நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் மார்ச் முதலாம் திகதி மாலை மூன்று மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளது (16)

## யாழ். வைத்தியசாலைக்கு 'எழிலகம்' காகிதாதிகள் உதவி

யாழ் போதனா வைத்தியசாலைக்கு 'எழிலகம்' தனது ஓராண்டு நிறைவையொட்டி 110 மருந்துச் சிட்டைப் புத்தகங்கள், 2000 சிகிச்சைக்கான திகதி மட்டை (சிட்டைகள்), 230 கொப்பிகள் கொண்ட சிகிச்சைக்கான மருந்துச் சிட்டைகள் என்பவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இதற்காக வைத்தியசாலைப் பணிப்பாளர் நன்றி தெரிவித்துக் கடிதம் ஒன்றினை எழிலகத்துக்கு அனுப்பிவைத்துள்ளார் (16)

## இடம்பெயர்ந்த மாணவர் குறித்து அதிபர்களுக்கு சுற்று நிருபம்

இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் விடயத்தில் பாடசாலை அதிபர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நிருவாக முறைகள் பற்றி கல்வித் திணைக்களம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளது.

பல பாடசாலைகளில் இடம்பெயர்ந்த மாணவர்களை அவர்கள் போதிய ஆவணங்களைக் கொண்டு வந்து ஒப்படைக்க முடியாத நிலையில் இரண்டாம் தரத்தில் நடாத்துவதும், விளையாட்டு, தமிழ்த்தினம் மற்றும் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்காமையும் கண்டுணரப்பட்டதாலேயே இச் சுற்று நிருபம் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது

மேற்படி மாணவர்களின் பிறப்புச் சான்றிதழ், தேர்ச்சியறிக்கை, விடுகைப் பத்திரம் போன்றவற்றை வற்புறுத்தாத முறையில் அவகாசம் கொடுத்து அதிபர்கள் பெற வேண்டுமென இச் சுற்றறிக்கை கூறுகிறது.

## தங்குமிட வசதிகளில் பாரபட்சம்!
## எதிரணி உறுப்பினர்கள் புகார்

தமக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதில் அரசு பாரபட்சமாக நடந்து வருவதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சலுகைகளுடன் கூடிய தங்குமிட வசதிகளை தற்பொழுது ஆளுங்கட்சி உறுப்பினர்களே அதிகளவில் அனுபவித்து வருவதாகவும் அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தங்குமிடங்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# சகலருக்கும் எயிட்ஸ் பரிசோதனை! கட்டாயமாக்க சட்டத்தில் திருத்தம்

ஒவ்வொருவரும் எயிட்ஸ் நோய்ப் பரிசோதனை செய்வது சட்டமூலம் கட்டாயமாக்கப்படவுள்ளது. எயிட்ஸ் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தும் வகையிலேயே இந்த நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளதாகச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கு ஏற்ப சுகாதாரச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது. அதற்கு முன்னோடியாகப் பாராளுமன்றத்தில் நகல் சட்டமொன்று விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

- இதன்படி ஒவ்வொரு பிரஜையும் கட்டாயம் எயிட்ஸ் பரிசோதனை செய்துகொள்ளுதல் வேண்டும்.
- எய்ட்ஸ் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் ஒவ்வொருவருக்கும் இலவசமாக வழங்கப்படும்.
- எயிட்ஸ்நோய்த் தொற்று உள்ளவர் பற்றிய தகவல்களைக் கொடுக்கத் தவறுதல் சட்டப்படி குற்றமாகக் கருதப்படும்.
- தனியான வைத்திய ஆய்வு கூடங்கள் தடைசெய்யப்படும்.

இந்தக் குற்றங்களை இழைப்போருக்கு ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாத தொகை தண்டமாக விதிக்கப்படும்.

## தேங்காய்க்குள் பெற்றோல் கடத்தமுயன்றவர் கைது!

தேங்காய்களுக்குள் பெற்றோலை கடத்த முயன்ற ஒருவர் வவுனியா தாண்டிக்குளம் தடைமுகாமில் வைத்து கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் தடைமுகாம் வழியாக, உள்ளே பெற்றோல் நிரப்பப்பட்ட 45 தேங்காய்களைக் கொண்டு வந்ததாகவும், சிலதேங்காய்களிலிருந்து பெற்றோல் கசிந்ததையடுத்து இக் கடத்தல் முயற்சி அகப்பட்டதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆசிரியர்களுக்கென தனியான சேவையொன்று உருவாக்கப்படும்

ஆசிரியர்களுக்கென தனியான ஆசிரிய சேவையொன்று புதிதாக ஏற்படுத்தப்படவுள்ளது. நிருவாக சேவை, கல்வி நிருவாக சேவை போன்று இந்த ஆசிரிய சேவையும் அமையும்.

நாட்டிலுள்ள ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் ஆசிரியர்களும் ஆறு பிரிவுகளாக தரம் பிரிக்கப்பட்டு இந்த ஆசிரிய சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

ஒவ்வொரு தரத்திற்குமென புதிதாக சம்பளத் திட்டங்கள் உருவாக்கப்படும். மூவர் கொண்ட குழுவின் சிபாரிசுக்கமையவே கல்வி அமைச்சு இந்த மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளது.

## தலைமன்னார் கப்பல் சேவையில் தடங்கல்; அதிகாரிகள் ஏமாற்றம்!

தலைமன்னாருக்கான அகதிக் கப்பல் சேவை முன்னர் அறிவிக்கப்பட்டதுபோல் கடந்த வியாழக்கிழமை நடைபெறவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

சென்னையிலிருந்து முதற் தடவையாக இராமானுஜம் என்ற கப்பலில் தலைமன்னாருக்கு அகதிகள் கடந்த வியாழக்கிழமை அனுப்பி வைக்கப்படுவர் என முன்னர் வெளியான செய்தியை அடுத்து தலைமன்னார்த் துறைக்குச் சென்றிருந்த அதிகாரிகளும், அகதிகளின் உறவினர்களும் கப்பல் வராமையால் ஏமாற்றமடைந்து திரும்பியதாக மன்னார்ச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

## ஈராக் எதிரணிகளின் உதவியை அமெரிக்கா நாடுகிறது!

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேயினைப் பதவியிலிருந்து அகற்றும் முடிவில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் மிக உறுதியாக இருப்பதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

சதாம் பதவியில் மட்டுமல்ல உயிருடன் இருப்பதற்கே தகுதியற்றவர் என வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி சதாமை பதவியிலிருந்து நீக்குவதற்கு ஈராக் எதிர்க்கட்சிகளின் உதவியை அமெரிக்கா நாடியுள்ளதையும் அந்த அதிகாரி முதற் தடவையாக ஒப்புக்கொண்டார்.

## பேராதனை பல்கலை. வெளிவாரி பரீட்சை முடிவுகள் வெளியாகின

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற 1989-90 ஆம் கல்வி ஆண்டு மாணவர்களுக்கான பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

பேராதனை, கொழும்பு ஆகிய பகுதிகளிலுள்ள பரீட்சை நிலையங்களில் மட்டுமே இப்பரீட்சை நடாத்தப்பட்டதனால், யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தோரில் பத்து சதவீதமானோர் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (35)

## புதிய களனிப் பாலம் இன்று முதல் பாவனைக்கு

கொழும்பில் பல கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய களனி பாலம் இன்று மாலை திறந்துவைக்கப்படவுள்ளது.

களனி கங்கைக்குக் குறுக்கே இந்தப் புதிய பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

## கொழும்புத்துறையில் தமிழ்த்தின விழா

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் தமிழ்த் தினவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 10 மணிக்கு மேற்படி பாடசாலை அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (47)

## இரவில் வெளிச்சமின்றி வரும் வாகனச் சாரதிகளுக்கு அபராதம்!

வீதிப் போக்குவரத்தை மீறுவோரை கண்காணிக்கும் பணி சாவகச்சேரியிலும் நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இரவில் வெளிச்சமில்லாமல் வரும் மோட்டார் சைக்கிளோட்டிகளும், கைகோர்த்து நேர்வரிசையில் பயணம் செய்யும் சைக்கிளோட்டிகளும், காவற் துறையினரால் பிடிக்கப்பட்டு, அபராதம் விதிக்கப்படுகின்றது. (16)

## மகா சிவராத்திரி

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி மகா சிவராத்திரி தினமன்று இரவு சங்காபிஷேகமும் 4 ஜாம விஷேட பூசையும் அதிகாலை தீர்த்த உற்சவமும் அத்துடன் விஷேட பஜனைகளும் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

அடியார்களின் வசதி கருதி மேற்படி ஆலயத்தில் அடியார்கள் தாமாக சிவலிங்கப் பெருமானுக்கு திருமஞ்சன தீர்த்த அபிஷேகம் செய்வதற்குரிய விஷேட ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பஞ்சாப் முதல்வராக 70 வயது சிங் தெரிவு

பஞ்சாப் மாநில முதல்வராக இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த வீப சிங் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

70 வயதுத், நரைத் தலையுடைய வீடசிங் ஒரு சீக்கியராவார்.

பஞ்சாப்பில் அச்சத்தைப் போக்க நாமும் சேர்ந்து உழைப்போம் என செய்தியாளர்களிடம் பேசிய பஞ்சாப் புதிய முதல்வர் சிங் தெரிவித்தார்.

111 உறுப்பினர்களைக் கொண்ட பஞ்சாப் சட்டசபையில் 87 இடங்களை ஆளும் இந்திரா காங்கிரஸ் கைப்பற்றியுள்ளமை தெரிந்ததே.

---

அரசியல் அவதானிப்புகள்:

## பஞ்சாப்பில் ஒரு பொம்மை அரசு

- எஸ். ஜி. எம்.

சுமார் ஐம்பத்தேழு மாத கால ஜனாதிபதி ஆட்சியின் கீழ் இருந்த பஞ்சாப் மாநிலத்தில் 19-02-1992 ஆம் திகதி 115 சட்டமன்றத் தொகுதிகளிலும் 13 பாராளுமன்ற (லோகசபை) தொகுதிகளிலும் தேர்தல் நடைபெற்றது.

117 சட்டமன்றத் தொகுதிகளில் இரண்டு தொகுதிகளில் போட்டியின்றி இரு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்

காலிஸ்தான் என்னும் தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைத்து சீக்கிய தீவிரவாதக் குழுக்கள் ஆயுதமேந்திப் போராட்டம் நடாத்திவரும் ஒரு மாநிலம் பஞ்சாப்

19-02-1992 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலைச் சீக்கிய தீவிரவாதக் குழுக்கள் மட்டுமல்ல அகாலி தளம் (காபூல்) கட்சியைத் தவிர சகல பஞ்சாப் மாநிலக் கட்சிகளான சகல அகாலி தளக் கட்சிகளும் இத்தேர்தலைப் பகிஷ்கரித்தது மட்டுமல்ல, மக்கள் இத்தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தன.

1991 ஆம் ஆண்டு தேர்தல்களில் பஞ்சாப் மாநிலத்தில் தேர்தல் நடாத்துவதை எதிர்த்த இந்திரா காங்கிரஸ் மீண்டும் டெல்லியில் தனது ஆட்சி அமைந்த பின்பு பஞ்சாப்பில் தேர்தல் நடாத்தப்படலாம் எனக் கூறி தேர்தலையே நடாத்தி முடித்து விட்டது.

இப்பொழுது நடைபெற்ற சட்டமன்ற மற்றும் லோகசபைத் தேர்தல்களில் 658 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

ஒரு கோடியே முப்பத்திரண்டு லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க 14650 வாக்குச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டன

மாநிலத்தின் வழமையான சட்டம் ஒழுங்கு பராமரிப்பு படையினருக்கு மேலாக சுமார் இரண்டரை லட்சம் இராணுவத்தினரும், 28000 றிசேவ் பொலிஸாரும் சேவையிலீடுபடுத்தப்பட்டனர்.

இந்திரா காங்கிரஸ், பகுஜன் சமாஜவாதிக் கட்சி, அகாலி தளம் (காபூல்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாக்ஸிஸ்ட்). பாரதீய ஜனதாக் கட்சி ஜனதா தளம் ஆகிய கட்சிகளும் பல சுயேட்சைகளும் போட்டியிட்டன

சட்டமன்றத் தேர்தலில் 87 தொகுதிகளைக் கைப்பற்றியதன் மூலம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலத்தை இந்திரா காங்கிரஸ் பஞ்சாப் சட்டமன்றத்தில் பெற்றிருக்கிறது.

பி ஜே. பி. கட்சி மட்டும்தான் 9 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது அகாலி தளம் (காபூல்) கட்சி கூட 3 ஸ்தானத்தையே கைப்பற்றக் கூடியதாக இருந்திருக்கிறது. இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் 5 இடத்தையே பிடித்தன.

லோகசபைத் தேர்தலில் 13 தொகுதிகள் 12 தொகுதிகளை இந்திரா காங்கிரஸும், ஒரு தொகுதியை மட்டும் பீ ஜே. பி வென்றுள்ளது.

இந்திரா காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களின் கூட்டத்தில் அக்கட்சியின் தலைவராகச் சீக்கியரான பீஅந்சிங் தெரிவு செய்யப்பட்டு அவரே முதலமைச்சராகப் பதவியேற்கப் போகிறார் அதன் மூலம் ஒரு 'தெரிவு செய்யப்பட்ட' மாநில அரசாங்கமொன்று பதவியேற்கப் போகிறது

கடந்த காலத் தேர்தல்களில் 60 வீதமான வாக்காளர்கள் வாக்களித்த இந்த மாநிலத்தில் இம்முறை 25 வீதமானவர்களே வாக்களித்துள்ளனரென அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே 75 வீதமான வாக்காளர்கள் தேர்தலைப் புறக்கணித்துள்ளது தெளிவாகிறது.

அதிலும் பஞ்சாப் மாநிலத்தின் நகரப் புறங்களில் தான் வாக்களிப்பு நடைபெற்றதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன இப்பகுதிகளில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்துக்கள் அதிகமாக வசிப்பதாகக் கூறப்படுகிறது

சீக்கியர்கள் அதிகமாக வாழும் கிராமப் புறங்களில் வாக்களிப்பு 10 வீதம் கூட இல்லையெனவும் கணிப்பிடப்படுகிறது.

ஆகவே தனிநாடு கோரிப் போராடும் சீக்கியர்கள் இத்தேர்தலை மிகவும் தீவிரமாகப் பகிஷ்கரித்திருப்பதைக் கவனிக்காமல் இருக்க முடியாது.

ஜனநாயக முறையில் குறைந்தது ஐம்பது வீதமான வாக்காளர்கள் வாக்களித்தால் அதை ஒரு பிரதிநிதித்துவ மக்கள் அரசு எனக் கூறலாம்.

ஆனால் 25 வீதம் வாக்குகளைப் பெற்ற ஒரு அரசை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதித்துவ அரசு என்று கூறவே முடியாது. தேர்தலில் முறைகேடு நடந்ததாக ஜனதா தளக் கட்சித் தலைவர் எஸ். ஆர். பொம்மை குற்றஞ் சாட்டியும் உள்ளார், அகாலி தளக் கட்சிகளும் முன்கூட்டியே குற்றஞ் சாட்டின

ஆகவே இந்திய அரசுக்கும், இந்திரா காங்கிரஸுக்கும் தமக்குக் கைவந்த கலையான பொம்மை அரசு அமைக்கும் நடவடிக்கையைப் பஞ்சாபிலும் மேடையேற்றுகிறதைத்தான் கவனிக்கலாம்

இப்படியான ஒரு பலவீனமான பொம்மை அரசு காலிஸ்தான் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

எவ்வாறாயினும் லோகசபையில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் பலம் 244 ஆக அதிகரித்தது இக்கட்சிக்கு வாசியே.

சட்டசபையைச் சிறிது காலத்தின் பின்பு கலைத்தாலும் பாராளுமன்றப் பலம் மத்திய அரசு தாக்குப் பிடிக்க உதவும் மொத்தத்தில் பஞ்சாப் தேர்தல் இந்திரா காங்கிரஸுக்குச் சுத்த லாபம். ஆனால் பஞ்சாபியருக்கு நட்டமே.

# அணு சக்தி அமைதித் தேவைக்கே பயன்படுத்தப்பட வேண்டும்

அணு சக்தி வளம் அமைதி யான தேவைகளுக்கே பயன் படுத்தப்படவேண்டும் இதன் பொருட்டு இந்தியாவும், கஜகிஸ்தானும் ஒன்று பட்டு பணிபுரிய வேண்டும் என்று இந்தியாவுக்கு வருகை தந்த கஜகிஸ்தான் ஜனாதிபதி கூறி யுள்ளார்.

இந்தியாவும் கஜகிஸ்தானும் ஐந்து உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது இராஜ ரீக உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு, வாணிபம், பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில் நுட் பம் என்பவற்றில் பரஸ்பரம் ஒத்துழைப்பு வழங்குவதற் கும் உடன்படிக்கைகள் வழி வகுக்கின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

# யப்பானில் திடீர் சூறாவளி வாகனங்கள் மோதுண்டன

யப்பானின் வடபகுதியில் நேற்று திடீரென ஏற்பட்ட சூறாவளியினால் வீதி விபத் துக்கள் இடம்பெற்றன.

சுமார் 67 வாகனங்கள் இதனால் விபத்துக்குள்ளான தால் இருவர் உயிரிழந்தனர். 27 பேர் வரை காயப்பட்டனர்

# படித்த யுவதிகளுக்கு சுயதொழில் பயிற்சிநெறி

திருநெல்வேலி அரசினர் மாவட்ட விவசாயப்பண்ணை யில் படித்த யுவதிகளுக்கான குறுகிய கால சுயதொழில் பயிற்சி நெறி அடுத்தமாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக் கப்படவுள்ளதாக மாவட்ட விவசாய உதவிப்பணிப்பாளரி கே. குணரத்தினம் தெரிவித் துள்ளார்.

இப்பயிற்சி நெறியில் சேர விரும்பும் படித்த யுவதிகள் தனது விண்ணப்பங்களை இம் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் பண்ணை முகாமை யாளர், மாவட்ட அரசினர் விவசாயப்பண்ணை திருநெல் வேலி என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கும்படி கேட்கப் பட்டுள்ளனர்.

இப்பயிற்சி நெறியில் விவ சாயம், தையல், மனையியல் மிருகபரிபாலனம் போன்ற பயிற்சிகள் அளிக்கப்படவுள் ளன 06

சாவகச்சேரியில்...

வினரின், செவ்வானம் இசைக் குழுவினரின் ''எழுச்சிப்பாடல் களும்'', வலிகாமம்பிரிவினரின் ஆதரவில் உருவான ''சுதந் திரப் போர் வெல்லும்'' என்ற நாடக இடம்பெறவுள்ளதும்

# தமிழருக்கு இளைக்கப்பட்ட நீதி ஜனாதிபதி ஒப்புக்கொள்கிறார்

வடக்கு கிழக்கு பகுதி மக் கள் புறக்கணிக்கப்பட்டு அநீதி இளைக்கப்படுவதனால் அவர்கள் தீவிரவாதிகளாக் ஈர்க்கப்படுகிறார்கள

இவ்வாறு ஜனாதிபதி பிரே மதாஸ கனேமுல்லவில் நடை பெற்ற மத வைபவம் ஒன் றில் பேசுகையில் கூறினார்.

இருபது வருடங்களாக வடக்கு கிழக்குப் பகுதி மக் களுக்கு தீங்குகள் இளைக்கப் பட்டதை ஜனாதிபதி இங்கு ஒப்புக் கொண்டார்.

எம்மிடையே ஒற்றுமை யின்மையால் இந்திய படை இங்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது என மேலும் கூறினார்.

## மருந்து வாங்க வந்தவர் மரணம்

மருந்து வாங்க வந்த இடத் தில் ஒருவர் மாரடைப்பால் காலமானார், கலவியங்காடு சந்திக்கு அண்மையில் குளிர் பானக் கடை ஒன்றுக்கு முன்னால் இன்று இரவு 7 மணியளவில் இவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார்

திருநெல்வேலி கலாசாலை வீதியைச் சேர்ந்த கந்தையா மாசிலாமணி என்ற இளைப் பாறிய அரசாங்க உத்தி யோகத்தர் இவர் என அடை யாளம் காணப்பட்டுள்ளது. (41)

மணலாறு...

பிரமுகர்கள் ஆகியோர் சிறப்பு ரையாற்றுவர்

யாழ். சனசமூக நிலையங் களின் சமாசம் இவ் விழாவை ஒழுங்கு செய்துள்ளது

நியூசிலாந்து...

மாற்றங்களில் 249 ஓட்டங் களைப் பெற்றது

அவுஸ்திரேலிய அணி வெற்றி பெறுவதற்கு அதன் துடுப்பாட்டத்தில் ஒரு பந்து மாற்றத்தில் 4.5 ஓட்டங் களைப் பெறவேண்டியிருந் தது ஆனால் அதன் ஆரம்ப துடுப்பாட்டக்காரர்கள் ஒரு பந்து மாற்றத்திற்கு 2 4 ஓட்டங்களையே பெற்றனர். இருந்தும் மத்திய துடுப்பாட் டக் காரர்கள் இடை வெளியை ஈடு செய்யும் விதத் தில் ஆடியும் 60 பந்து மாற் றங்களில் 9 இலக்குகள் இழப்பிற்கு 210 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதினால் தோல்வியைத் தழுவ வேண் டியதாயிற்று. (16)

இராமேஸ்வரத்தில்...

இலங்கை அகதிகளுடன் இரு இந்திய கடற்படை கப்பல் களும் இரு தரை, காவல்படை படகுகளும் வருகின்றன

இந்த அகதிகளுக்கு பாது காப்பாகவே இந்திய கடற் படை வருவதாக இந்திய தரப் பில் தெரிவிக்கப்படுகிறது.

## ஏற்றுமதித் தடையை அமெரிக்கா நீக்கியது

சீனாவுக்கு நவீன தொழில் நுட்ப சாதனங்களை விற் பதற்கு விதித்திருந்த தடை யை அமெரிக்கா நீக்கியுள்ள தாக அறிவிக்கப்படுகிறது.

மத்திய கிழக்கு நாடுகளுக் கும் மற்றும் ஆசிய நாடு களுக்கும் ஆபத்தான ஆயு தங்களை சீனா விற்பனை செய்வது தொடர்பாக எழுந்த தகராறின் அடிப் படையிலேயே அமெரிக்கா இத்தடையை விதித்திருந் தது.

இத்தடை நீக்கத்தின் கார ணமாக நவீன கொம்யூட் டர்கள், சற்லைட், தொழில் நுட்பம் முதலானவற்றை அமெரிக்கா தனக்கு விற்க வேண்டும் என சீனா எதிர் பார்க்கிறது எனவும் அதன் பின்னர் ஏவாயுதக் கட்டுப் பாட்டு விதிகளைக் கடைப் பிடிக்க சீனா முன்வரும் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏவாயுதக் கட்டுப்பாட்டு விதி முறைகள் அனைத்துலக உடன்படிக்கை என்பதும், அது கையெழுத்தான போது சீனா அழைக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கும் சீனா அமெரிக்காவினால் விற்பனை செய்யும் தொழில் நுட்ப உபகரணங்கள் தற்காப்புக்கு மட்டுமே உபயோகிக்கப்படும் எனத் தெரிவித்திருக்கிறது

இராணுவ...

னுவ முகாமில் தமிழ் இளை ஞனின் அலறல் சத்தம் கேட் டதும் அதைத்தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதையும் அறிக்கை சுட் டிக்காட்டியிருக்கிறது

இராணுவத்தரப்பினருக்கு ஒத்துழைப்பாகச் செயற்படும் குழுக்கள் உள்ளூர் மக்களைச் சித்திரவதை செய்வதிலும் அவர்களைத் துன்புறுத்தி காடைத்தனம் புரிவதிலும்மிக மூர்க்கத்தனமாகவுள்ளனர் என்றும் அறிக்கை கண்டித்தி ருக்கிறது.

## அடுத்த வாரம இந்திய 'பட்ஜட்'

இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவ் இந்திய பாராளுமன் றத்தில் அடுத்தவாரம் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப் பிப்பார்.

## காலமானார்

### வேதையா குருக்கள் கந்தையா குருக்கள்

வேதாரணிய குருக்கள் பரம்பரையைச் சேர்ந்த வேதையா குருக்கள் கந்தையா குருக்கள் அவர்கள் 22, 02 92 அன்று சிவபத பேறு எய்தினார். அவர் கர வெட்டி கிழக்கு பத்திரகாளி அம்மன் கோயில் பிரதம குருவும் ஆவார். குரும்பசிட்டியை வசிப்பிடமாக கொண்ட க சோமசுந்தரம் அதியர் அவர்களின் தந் தையும் நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில் பிரதம குருத் சோமசுந்தராசா குருக்களின் பேர னும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23 02.92 ஞாயிற்றுக்கிழமை பத்திரகாளி கோயிலடியில் முற்பகல் 11 மணி அளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

கரவெட்டி. மகன், பேரப்பிள்ளைகள்

02046

யாழ். கோட்டம்
விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தின்
ஆதரவில்

கலை, பண்பாட்டுக்கழகத்தினரின்
'உயிர்த்த மனிதர் கூத்து'
(நாடகம்)

சாந்தன் இசைக்குழுவினரின்
'போர்க்கால இராகங்கள்'

காலம்: 23. 02. 1992 (இன்று) பி. ப. 6. 00 மணி
இடம்: அரியாலை சனசமூக நிலைய
காசிப்பிள்ளை அரங்கு.

அன்பளிப்பு: ரூபா 10. 00.

02045

வடமாகாண மக்களுக்கான தொலைத் தொடர்புகள்

வடமாகாணத்திலுள்ள தமது உறவினர்களுக்கு அனுப்பும்
வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்கள், வடமாகாணத்திலுள்ள தமது உறவினர்களுக்கு அனுப்பும் அவசர கடிதங்கள் தகவல்களை வவுனியாவுக்கு FAX மூலம் நேரடியாக இப்போது அனுப்பிவைக்கலாம்.
72 மணித்தியாலங்களில் அவற்றை உரியவர்களுக்கு விநியோகம் செய்வதற்கு

வவுனியா மிதுஷா கொம்யூனிக்கேஷன்ஸ்

வசதி செய்துள்ளது.

நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய FAX இலக்கம் 94 - 024 - 2033 "METUCOM" VAVUNIYA

உலகின் எந்த நாட்டிலிருந்தும் வவுனியா மிதுஷா கொம்யூனிகேஷனுடன் FAX மூலமோ அல்லது நேரடித் தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களுக்கான FAX விநியோக சேவை விசேட கட்டணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

★ இரவு - பகல் 24 மணி நேர சேவை
★ வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்பை எதிர்பார்த்து இருப்பவர்களுக்குப் பாதுகாப்பான சூழலில் தங்குமிடம் இலவசம்

வெளிநாட்டு - உள்நாட்டு சகல தொலைத் தொடர்புச் சேவைகளுக்கும் இன்றே நாடுங்கள்

மிதுஷா கொம்யூனிக்கேஷன்ஸ்
முதலாம் மாடி
இல 58, 59, புதிய பேருந்து நிலையக் கட்டிடம்,
வவுனியா.

தொலைபேசி - 024/2053
024/2033
FAX - 'Metucom' - 94-024-2033
Vavuniya

02044

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 23-02-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது